ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்ய தர்மம்.

वाचा मुष्ट्या स्वदृढधनुषा योऽपराधं व्यतानीत्
पार्थश्शम्भो तव भगवतो द्रागदास्तस्य चेष्टम् ।
नाहं कर्तुं सकृदपि विभो तं हृदापीश मन्ये
युक्तं किं ते मयि विमुखतानागसि त्वत्कभक्ते ॥

வாசா முஷ்ட்யா ஸ்வத்ருடதநுஷா யோऽபராதம் வ்யதாநீத்
பார்த்தஶ்ஶம்போ தவ பகவதோ த்ராகதாஸ்தஸ்ய சேஷ்டம் ।
நாஹம் கர்தும் ஸக்ருதபி விபோ தம் ஹ்ருதாபீஶ மந்யே
யுக்தம் கிம் தே மயி விமுகதாநாகஸி த்வத்கபக்தே ॥

ஹே சம்போ! ஸகல ஜனங்களுக்கும் சுகத்தைக் கொடுக்கும் ஸ்ரீ பரமேச்வர, யாதொரு அர்ஜுனன ஸர்வஜகத்திற்கும் பூஜ்யராய்விளங்கும் உமககு நிந்தியங்களான வாக்குகளாலும கைகளாலும தன்னுடைய மிகவும் கெட்டியான சாபத்தாலும் பெரிதான அபராதத்தைச் செய்தானோ அவ்வித அபராதிக்கு உடனே அவன் விரும்பிய பலங்களைக் கொடுத்தீர். அவனால் செய்யப்பட்ட அபராதத்தை உம்ம விஷயத்தில் நான் மனதினால்கூடக் கருதவில்லை. இவ்விதம் யாதொரு அபராதத்தையும் செய்யாதவனும் உம்முடைய பக்தனுமாயிருக்கும் என்னிடத்தில் நீர் அநாதரவாயிருப்பது உசிதமாகுமா?

ஒரு பக்தர் பகவானிடம் ஹே பிரபோ, ஸ்வாமின் தங்களை வாக்காலும் கைகளாலும் ஆயுதங்களாலும் பலவாறாக ஹிம்ஸை செய்து மிகவும் அபராதியான சத்ருவைப்போலிருக்கும விஜயனுக்கு உடனே பலத்தையளித்தீர். நிரபராதியாய் எப்பொழுதும் தங்கள் சரணகமலங்களைத் தியானித்துக் கொண்டிருக்கும் பக்தனான என்னிடம் தாங்கள் அநாதரவாயிருக்கிறீர்களே அது உசிதமாகுமா? அப்படியிருப்பது நியாயமில்லை. ஆகையால் தயவு செய்து என்னையும் பக்ஷத்துடன் பாதுகாக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றார்.

உப- பத்திராதிபர்.

# ஆத்மாநாத்ம விவேகம்.

(௩௦௮-வது பக்கத் தொடர்ச்சி)

சிஷ்:— மோதம் என்றால் என்ன ?

குரு:— பிரியவஸ்துவின் லாபத்தால் ஏற்படும் ஸந்தோஷம் மோதமாகும். அந்தச் சந்தோஷமே ஜாஸ்தியாயிருந்தால் பிரமோதம் எனப்படும். இந்தக் கோசங்களுக்குள் ஞானசக்தியையுடையதான விக்ஞானமய கோசமானது கர்துரு ரூபமாக ஆகின்றது. இச்சா சக்தியையுடையதான மனோமயகோசமானது காரணரூபமாகின்றது. கிரியாசக்தியையுடையதான பிராணமயகோசமானது காரியரூபமாக ஆகின்றது. அவையவைகளுக்குற்ற யோக்கியதையை அனுஸரித்து இவ்வித விபாகம் செய்யப்பட்டதென்று சொல்லுகிறார்கள். இம்மூன்று கோசமும் சேர்ந்து சூக்ஷ்ம சரீரம் என்று கூறப்படுகின்றது.

சிஷ்;— ஆத்மாவை சரீரத்திரயவிலக்ஷணமாக எப்படி கூறப்படுகின்றது ?

குரு:— ஸத்யஸ்வரூபமாயுள்ள ஆத்மா அஸத்யஸ்வரூபமாக ஆகமாட்டான். அஸத்யரூபமாயுள்ள அநாத்மா ஸத்யரூபமாக ஆகமாட்டான். ஞானஸ்வரூபமாயுள்ள ஆத்மா ஜடரூபனாக ஆகமாட்டான். ஜடரூபமாயுள்ள அநாத்மா ஞானரூபனாக ஆகமாட்டான். இவ்விதமே ஸுகஸ்வரூபனாயிருக்கும் ஆத்மா துக்கஸ்வரூபனாக ஆகமாட்டான். இவ்விதம் ஏற்பட்ட பலவேற்றுமையால் ஆத்மா சரீரத்திரயவிலக்ஷணனாகக் கூறப்படுகிறான்.

சிஷ்:— ஆத்மா அவஸ்தாத்திரயங்களுக்கு சாக்ஷியாக எப்படி சொல்லப்படுகிறான் ?

குரு:— ஜாக்கிரதவஸ்தை இருந்தது, இருக்கின்றது, வரப்போகின்றது. ஸ்வப்பனுவஸ்தை இருந்தது, இருக்கின்றது, வரப்போகின்றது. ஸுஷுப்தி அவஸ்தையும் இவ்விதமே இருக்கின்றது, இவ்விதமுள்ள அவஸ்தாத்திரயங்களையும் விகாரமற்று நித்தியமாய் விளங்கும் ஆத்மாவானவன் அறிகிருன். ஆகையால் அவனை அவஸ்தாத்திரய சாக்ஷி என்று சொல்லுகிருர்கள். இங்கு கூறப்பட்ட பஞ்சகோசத்திற்கு விலக்ஷணனுயும் ஸர்வஸாக்ஷியாயும் சப்தம், ஸ்பரிசம், ரூபம் இவைகள் அற்றவனுயும், நாசரகிதனுயும், முக்காலங்களில் விளங்குகிறவனுயும் ஆத்யந்த சூன்யமாயும் ஸகல வஸ்துக்களுக்கும் மேலானதாயும் சலனமில்லாமல் ஸ்திரமாய் விளங்கும் யாதொரு வஸ்துவுண்டோ அவ்விதமகிமையுள்ள ஸச்சிதானந்தஸ்வரூபமான பரமாத்மவஸ்துவை சாஸ்திராசார்யோபதேசங்களால் எவன் நன்கறிகிருனே அம்மகா புருஷன் அடிக்கடி ஜன்மாவையும் மரணத்தையும் அடைவதற்குக்காரணமான மிருத்யுவினுடைய முகத்திலிருந்தும் உடனே விடுபடுகிருன். இந்த அபிப்ராயத்தையே ஓர் சுருதியும் அசப்தமென்று துவக்கி நன்குவெளியிடுகின்றது.

சிஷ்:— ஸச்சிதானந்த ஸ்வரூபமென்று சொல்லப்பட்டிருக்கின்றது சத்ரூபமென்ருல் என்ன ?

குரு;— வேறு ஒரு வஸ்துவாலும் பாதிக்கப்படாமலும் முக்காலங்களிலும் ஏகரூபமாய் விளங்குவதே ஸத்ரூபமாகும்.

சிஷ்:— சித்ரூபமென்ருல் என்ன ?

குரு:— இதர ஸாதனங்களை அபேக்ஷிக்காமல் தானுகப் பிரகாசித்துக்கொண்டு இதர ஸகல வஸ்துக்களின் பிரகாசத்திற்கும் தானே ஆச்ரயமாக இருப்பதற்குச் சித்ரூபமென்று பெயர்.

சிஷ்:— ஆனந்தஸ்வரூபமென்ருல் என்ன ?

குரு:— மிகவும் சிறந்ததான ஸந்தோஷத்திற்கு இருப்பிடமாயும் எப்பொழுதும் அளவில்லாமல் விளங்கும் ஆநந்தத்திற்கு ஆனந்தஸ்வரூபமென்று பெயர். இந்த அர்த்தங்களும் சுருதிகளில் ஸ்பஷ்டமாய் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இதுவரையில் வெளியிட்ட விஷயங்களின் சாராம்சம் என்னவென்ருல்— எவன் நித்ய சுத்த புக்த முக்தஸ்வரூபமாய் விளங்கும் பிர்ம்மமே நான் என்று ஸம்சயம் முதலியவைகள் இல்லாமல்

நன்கறிகிறானோ அவன் ஜீவன் முக்தனாகிறான் என்று ஏற்படுகின்றது. இவ்விதப் பதவியையடையாவிடில் அடிக்கடி ஜநநமரண ரூபமான ஸம்ஸாரகஷ்டத்தையடைந்தே தீரவேண்டும். அவ்விதம் அடையாமலிருக்கவேண்டியே ஆத்மஞானத்தையடைவதற்குற்ற ஸாதனங்களையும் அதிகாரியையும் ஆத்மாநாத்மஸ்வரூபத்தையும் சங்கிரகமாய் நிரூபித்திருக்கின்றார். ஆகையால் அவரவர்களும் தம்மாலியன்றவரை முயற்சித்து ஆத்மஞானத்தைப் பெற்று உத்தமமான சிரேயஸ்ஸைப் பெறவேண்டுமென்று கருணையுடன் நம் பரமாசார்யாள் உபதேசிக்கின்றார்கள். சுபம்.

உப-பத்திராதிபர்.

---

# ஸ்மிருதி செய்தவர்களின் ஆராய்ச்சி.

(௩௧௫-வது பக்கத் தொடர்ச்சி)

**अभिगम्य कृते दानं त्रेतास्वाहूय दीयते ।**
**द्वापरे याचमानाय सेवया दीयते कलौ ॥**

அபிகம்ய க்ருதே தானம் த்ரேதாஸ்வாஹூய தீயதே ।
த்வாபரே யாசமானாய ஸேவயா தீயதே கலௌ ॥

கிருதயுகத்தில் தானம் செய்தால் அதைப் பெற்றுக்கொள்ளும் பிராமணன் கிடைக்கமாட்டான். அதனால் அத்தகைய வேதியனைத் தேடிப்பிடித்துக்கொடுத்து கிருதார்த்தமாவார்களாம். அடுத்த யுகத்தில் வழியில் போகிறவனைக் கூப்பிட்டுக்கொடுப்பார்களாம். அதற்கடுத்த யுகத்தில் வந்து யாசகம் செய்யும் பிராமணனுக்குக் கொடுப்பார்களாம். இக்கலியில் நடக்கும் ஸ்வபாவம் நமக்குத்தெரிந்தே இருக்கிறது. யஜமானனுக்கு ஸேவைசெய்துவந்தால்அவனுக்குத்தான் கொடுக்கப்படுமாம். ஆகவே இது யுகதர்மமல்லவோ. ஆனால் இவ்விதம்ஸேவைசெய்தவனுக்குக்கொடுப்பது தர்மம்தானோவென்றால் இல்லை. உத்தமமான தானத்தைத்தான் செய்யவேண்டும். இது நிற்கட்டும். மற்றும் யுகசாமர்த்தியத்தைப் பாருங்கள்.

त्यजेद्देशं कृतयुगे त्रेतायां ग्राममुत्सृजेत् ।
द्वापरे कुलमेकं तु कर्तारं तु कलौ युगे ॥

𑌤𑍍𑌯𑌜𑍇𑌦𑍍𑌦𑍇𑌶𑌂 𑌕𑍃𑌤𑌯𑍁𑌗𑍇 𑌤𑍍𑌰𑍇𑌤𑌾𑌯𑌾𑌂 𑌗𑍍𑌰𑌾𑌮𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌜𑍇𑌤𑍍 ।
𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑍇 𑌕𑍁𑌲𑌮𑍇𑌕𑌂 𑌤𑍁 𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌂 𑌤𑍁 𑌕𑌲𑍌 𑌯𑍁𑌗𑍇 ॥

கிருதயுகத்தில் ஒருவன் பாதகத்தொழில் செய்துவிட்டால் அவனிருக்கும் தேசத்தையே எல்லோரும் விட்டொழிப்பார்கள். த்ரேதாயுகத்தில் அவனிருக்கும் கிராமத்தைத் தள்ளுவார்கள். த்வாபரயுகத்தில் அவனது குலத்தை விலக்குவார்கள், நம் கலியில் பாபம் செய்தவனை மட்டிலும் விலக்கினால் போதுமென்றார். இப்போது நாம் அவனையும் விலக்குவதில்லையென்று ஸாதிக்கிறோம். இது நியாயமல்ல.

कृते सम्भाषणादेव त्रेतायां स्पर्शनेन च ।
द्वापरेत्वन्नमादाय कलौ पतति कर्मणा ॥

𑌕𑍃𑌤𑍇 𑌸𑌂𑌭𑌾𑌷𑌣𑌾𑌦𑍇𑌵 𑌤𑍍𑌰𑍇𑌤𑌾𑌯𑌾𑌂 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌨𑍇𑌨 𑌚 ।
𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑍇𑌤𑍍𑌵𑌨𑍍𑌨𑌮𑌾𑌦𑌾𑌯 𑌕𑌲𑍌 𑌪𑌤𑌤𑌿 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 ॥

கிருதயுகத்தில் பதிதனோடு பேசினால் பதிதனாவான். திரேதாயுகத்தில் அவனைத்தொட்டாற்போதும். த்வாபரயுகத்தில் அவனுடன் புசித்தால் பிடித்தது. கலியுகத்தில் அவனைப்போற் கன்மம் செய்தால்தானென்பதும் யுகத்தின் வீர்யத்தையே ஒட்டி ஏற்பட்டது. இவ்விதமெல்லாம் நேருவதற்கு முக்கிய காரணத்தை இப்பொழுது விளக்குகிறார்.

कृतेत्वस्थिगताः प्राणाः त्रेतायां मांसमाश्रिताः ।
द्वापरे रुधिरं चैव कलौत्वन्नादिषु स्थिताः ॥

𑌕𑍃𑌤𑍇𑌤𑍍𑌵𑌸𑍍𑌥𑌿𑌗𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌃 𑌤𑍍𑌰𑍇𑌤𑌾𑌯𑌾𑌂 𑌮𑌾𑌂𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌃 ।
𑌦𑍍𑌵𑌾𑌪𑌰𑍇 𑌰𑍁𑌧𑌿𑌰𑌂 𑌚𑍈𑌵 𑌕𑌲𑍌𑌤𑍍𑌵𑌨𑍍𑌨𑌾𑌦𑌿𑌷𑍁 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 ॥

கிருதயுகத்தில் பிராணன் எலும்பைப் பற்றி நின்றது. திரேதாயுகத்தில் மாம்ஸத்தில் நின்றது. த்வாபரயுகத்தில் ரக்தத்தில் ஒட்டியது. கலியிலோவெனில் அன்னத்தை அடைந்தது. இதனால் அந்தந்த யுகத்தின் மனிதர்களின் ஸாமர்த்தியம் நன்கு விளங்கிற்று. இம்மட்டா

जितो धर्मो ह्यधर्मेण सत्यंचैवानृतेन च ।
जिताश्चोरैस्तु राजानः स्त्रीभिश्च पुरुषाः कलौ ॥

ஜிதோ த⁴ர்மோ ஹ்யத⁴ர்மேண ஸத்யஞ்சைவாந்ருதேந ச ।
ஜிதாஶ்சோரைஸ்து ராஜாநஃ ஸ்த்ரீபி⁴ஶ்ச புருஷாஃ கலௌ ।

அதர்மம் தர்மத்தை வென்றுவிடும். பொய் ஸத்தியத்தை வெல்லும். திருடர்கள் அரசர்களை ஜயித்துவிடுவார்கள். அக்கலியில் ஸ்திரீகள் புருஷர்களை வெல்வார்கள் ஆஸ்திகர்களே இதில் எது குறைவாய் இருக்கிறது. எதை எவ்விதம் நல்வழிக்குத் திருப்பி விடலாம். இப்போதிய புத்திமான்கள் ஸத்தியம்தான் சொல்லவேண்டுமென்றும் தர்மத்தையே செய்யவேண்டுமென்றும் செய்துவிடுவார்களோ. ஸ்திரீகளுக்கு ஸ்வாதந்திரியம் கொடுக்கவேண்டுமாம். என்ன விபரீதம். நம் மகரிஷிகளின் வார்த்தையில் ஒரு எழுத்துக்கூட வீணாய்விடாது. இதைப்பற்றி விரிப்பதென்றால் எழுதிமுடியாது. ஆயினும் இப்பிரகிருதத்தில் எழுதாமல் விடுவதற்குமில்லையாதல்பற்றிக் கூடியவளவு சுருங்கக் கொஞ்சம் கூறுவாம். இனிக்கலியுகம் முற்றி வளர்கிறதென்பதற்கு இலக்கணம் கூறுகின்றனர்.

यदा यदा सतां हानिर्वेदमार्गानुसारिणाम् ।
तदा तदा कलेर्वृद्धिरनुमेया विचक्षणैः ॥

யதா³ யதா³ ஸதாம் ஹாநிர்வேத³மார்கா³நுஸாரிணாம் ।
ததா³ ததா³ கலேர்வ்ருத்³தி⁴ரநுமேயா விசக்ஷணை: ॥

எப்போதெப்போது வேதமார்க்கத்தை அநுஸரித்த ஸாதுக்களுக்கு நாசமேற்படுகிறதோ அப்போதப்போது கலி வளர்கிறதென்றறி. பாானமே புசிப்பதென்று வைதிகர் கங்கணம் கட்டிக்கொண்டதால் பரஸ்திரீகளை மனதில் எப்போதும் நினைப்பதாலும் கெட்ட தானங்களைக் கைநீட்டிக் கூசாமல் வாங்குவதாலும் பிராமணனிடமிருந்து நிக்ரகானுக்கிரக சக்தி தொலைந்துவிட்டது. மனிதர்களுள் வர்ணாசிரமாசாரப்பிரவிர்த்தி தொலைந்து விடும். வேதாத்யனம் தூங்கி விடும். தர்மமான விவாகம் நடவாது. குருசிஷ்யன் முறை கட்டுப் பறந்து போம். தம்பதிக்கிரமம் போய்விடும். தைவபூஜை தொலைந்து விடும். எவனெவனுக்கு எதெது பிடிக்குமோ அதெல்லாம் சாத்திரம்தான். பணமில்லாப்புருடனை

ஸ்திரீகள் விட்டு விடுவார்கள். ஸ்நானமில்லாமலே புசிப்பார்கள். பஞ்சம் பயம் பீடை முதலியவைகளால் ஜனங்கள் மிகவும் பீடிக்கப்படுவார்கள். வேதமார்க்கம் அழிந்து பாஷண்டர்கள் நிறைந்து விடுவதால் அதர்மம் மேலிட்டு அல்ப ஆயுள் ஏற்படும். அப்போது தர்மம் எங்கேயாவது ஒளிந்து நிற்கும். சூத்திரர்கள் தபஸ்வி வேடம்பூண்டு தவம் புரிவார்கள். சூத்திரர்கள் பிராமணர்களை அடிப்பார்கள். சூத்திரர்களுக்கு வேதத்தைச் சொல்லிக் கொடுப்பார்கள். லௌகிக கானங்களால் தேவனை ஆராதனம் செய்வார்கள். பிராமணர்கள் வாமாசாரத்தையும் பாசுபதத்தையும் பாஞ்சராத்திரத்தையும் கைக்கொள்வார்கள். முன் தக்ஷனது யாகத்தில் ததீசி மகரிஷியின் சாபம் பெற்ற பிராமணர்கள் இக்கலியில் பிராமணர்களாய்ப் பிறந்து தமோகுணம் நிறையப்பெற்று வேதத்தையும் மகாதேவனையும் நிந்தனை செய்வார்கள். இன்னும் கௌதமரது சாபம் பெற்றவர்களும் இங்கு பிராமணர்களாயவதரித்து சிவவிஷ்ணு நிந்தையையும் வேதநிந்தையையும் பிராமணநிந்தையையும் செய்வார்கள். ஆஸ்திகர்களே ! இவ்விஷயத்தைப் பற்றி முன்னர் நம் பத்திரிகையில் விசேஷமாய்க் கூறியுள்ளேன். ஆயினும் மறுபடியும் கூறுவது குற்றமாகாது. இன்னும் எத்துணை தடவை கூறினும் நம் மனதிலேறாது. இன்னும் ஒவ்வொரு புராணங்களிலும் இருக்கும் இக்கலி மஹிமையின் ஸ்வரூபத்தைச் சொல்வோமென்றால் இதுவே பெரும் புராணமாய் விடும். ஆயினும் ஆஸ்திகன் அவைகளைப் படித்தே தீரவேண்டும். அவைகளைப் படித்தால் ஆஸ்திக்யம் நிலைபெறும். நம்மகரிஷிகள் தீர்க்கதரிசிகளென்பது வெளிப்படும். சாபம்பெற்ற பிராமணர்கள் இன்னாரென்பது விளங்கும். நம்மிடத்தில் அத்தகைய தோஷமிருப்பின் அதை விலக்கிக்கொள்ள புத்தி உதிக்கும். இதைப்பற்றி தர்ம சாஸ்திரகாரர்களின் அபிப்பிராயத்துடன் அடுத்துவெளியிடுகிறேன்

## யுகத்தைப்பற்றி விஸ்தரிப்பானேன்.

ஆரியர்களே ? முன்னர் கூறியவாறு யுகத்தைப்பற்றி விஸ்தரிப்பது அவசியம் தானென்பதை பராசரரே கூறுகின்றனர்.

युगे युगे च ये धर्मास्तत्र तत्र च ये द्विजाः ।
तेषां निन्दा न कर्तव्या युगरूपा हि ते द्विजाः ॥

யுகே யுகே ச யே தர்மாஸ்தத்ர தத்ர ச யே த்விஜா:।
தேஷாம் நிந்தா ந கர்தவ்யா யுகரூபா ஹி தே த்விஜா:॥

யுகம்தோறும் எந்ததர்மமோ ஆங்கு எந்தவேதியர்களோ அவர்களை நிந்தித்தல் கூடாது அவர்கள் யுகரூபர்களென்றார். இங்கு மாதவர் வ்யாக்யானத்தை கவனியுங்கள். அதாவது யுகத்திற்குத் தக்கவாறு பிராமணர்களென்றால் அப்போது கலியில் தர்மம் வேண்டாம் ஏனெனில் எல்லோரும் கௌதமருடையவும் ததீசியினுடையவும் சாபத்தால் பாஷண்டர்களாயும் நாஸ்திகர்களாயும் அவதரித்திருப்பதால் சாபத்தின் பலனை அனுபவிப்பவர்களுக்கு தர்மம் வேண்டாம் அவர்களுக்கு அதில் தோஷமுமில்லையெனலாமே யெனில் இல்லை, யுகஸாமர்த்தியத்தைப் பற்றி வர்ணித்தால் நமக்கு ஏற்படும்பலன் யாதெனில் யுகத்திற்குத்தக்கவாறு விதிக்கப்பெற்றிருக்கும் கன்மாவையும் தோஷத்திற்குத்தக்கவாறு கூறப்பட்ட பிராயச்சித்தத்தையும் சக்தியுள்ளவன் அனுஷ்டித்துத்திரவேண்டும். அவ்விதமனுஷ்டியாதவன் நிந்திக்கத்தக்கவனென்றும் சக்தியற்றவன் நிந்தாபாத்திரமாகமாட்டானென்பதற்குத்தான். ஆதல் பற்றியே

भ्रूणहत्यापितुस्तस्यास्सा कन्या वृषली स्मृता ।
ப்ரூணஹத்யா பிதுஸ்தஸ்யாஸ்ஸா கந்யா வ்ருஷலீ ஸ்ம்ருதா ।

அவளுடைய தகப்பனுக்கு ப்ரூணஹத்திதோஷமுண்டாகும் அக்கன்னியும் சூத்திரஸ்திரீயாவாள் என்று பாராசரரே நிந்தித்தார் இது கன்யாதானப் பிரகரணத்தில் ஸ்திரீரஜஸ்வலை யாகுமளவும் வைத்திருக்கக்கூடாது விவாகமாவதற்குமுன் அவள்ரஜஸ்வலை ஆய்விட்டால் அப்போது அவளைப்பெற்ற தகப்பனுக்கு ப்ரூணஹத்தி தோஷமுண்டாகும். அக்கன்னியும் சூத்ர ஸ்திரீயாவாள் என்று பாராசரரேவைதார். இதனுல்இவ்விஷயத்தில் சக்திஇல்லை என்றுகூறமுடியுமோ. இனி இவ்விஷயத்திலும் அசக்தவிஷயமென்பது நேருமோவெனில் நேரும் அதைவாத்ஸயாயனர் காமசூத்திராத்யாயத்தில் இவ்வாறு வெளியிடுகின்றனர்.

मन्दापदेशा गुणवत्यपि कन्या धनहीना कुलीनापि समानैरयाच्यमाना मातापितृवियुक्ता वा ज्ञातिकुलवर्तिनी वा प्राप्तयौवना पाणिग्रहणं स्वयमभीप्सेत ॥

ईषन्मन्ददोषा गुणवत्यपि कन्या धनहीना कुलीना-
पि सवर्णैरनभिलषिता मातापितृविहीना ज्ञाति
कुलवर्तिनी प्राप्तयौवना पाणिग्रहणं स्वय-
मिच्छेत ॥

சற்று மந்ததோஷமுள்ளவளும், குணமுள்ளகன்னிகை பணமற்றவளும் நற்குலத்திற் பிறந்தும் ஸமானமானவர்களால் விரும்பப்பெறுதவளும் தாய்தந்தையற்றவளும் ஞாதிகுலத்திலிருப்பவளும் யௌவனம்பெற்றவள் தானாய் விவாகத்தைச் செய்துகொள்ள விரும்பலாமென்றார். ஆகவே இத்தகையகன்னிக்கு சூத்திரஸ்திரீ என்ற தோஷமேற்படாது. இதனால்தர்மத்திற்குக் குறைவு ஏற்படாது. கிருதயுகத்தில் பத்துவருடங்களால் தர்மம்செய்து அடையப்பெறும் பலனை த்ரேதாயுகத்தில் ஒருவருடத்தாலும் த்வாபரயுகத்தில் ஒருமாதத்தாலும் கலியில் ஒருதினத்தாலுமடையலாம். க்ருதயுகத்தில் தியானத்தாலும் த்ரேதாயுகத்தில் யக்ஞங்களாலும் த்வாபரத்தில் அர்ச்சனைகளாலும் அடையும் பலனைக் கலியில் கேசவனது கீர்த்தனத்தாலடையலாம்.

(இன்னும் வரும்.)

M. N. சுப்பிரமண்ய சாஸ்திரி.

---

ஐந்தாவது பாகம்.

# ஸனகாதிகளின் வரலாறு.

(235-வது பக்கத்தொடர்ச்சி.)

இவ்வாறு வைன்யன்நிஷ்காமகர்மாக்களைச்செய்து, அவைகளை பகவானிடம் அர்ப்பணஞ்செய்து ஸனகாதி மஹாயோகிகளின் சந்தர்சனம் எப்போது லபிக்கும் என்று எதிர்பார்த்த வண்ணமாயிருந்தார். அவருடைய மனது ஸத்குருவை தியானிக்க தியானிக்க, மாசற்ற கண்ணாடிபோல் நிர்மலமாகியது. அம்மஹான்களின் வார்த்தையைப் பேசுவதிலேயே மிக்கசந்தோஷத்தை யடைந்து வந்தான். அப்போது சபையில் விளங்கும் அத்ரி முதலானவர்கள் ஸனகாதிகளின் சிறப்பை வர்ணிக்கலாயினர்,

ஓய் ராஜனே! கேட்கவேண்டும். சிருஷ்டியின் துவக்கத்தில் பிரும்மாவானவர் மிக்க பரிசுத்தமான மனதால் ஸனகர், ஸனந்தனர், ஸனத்ஸுஜாதர், ஸனத்குமாரர் என்ற நால்வரையும் படைத்தார். அவர்கள் உலகத்தில் பற்றற்று ஜிதேந்திரியர்களாய் விளங்கலானூர்கள். ஆகையால் அவர்களால் உலகசிருஷ்டிக்குப் பயன்படாததால், பிரும்மா அவர்களைத் தன்னிஷ்டப்படி விட்டுவிட்டார்கள். அவர்கள் எக்காலமும் பார்வைக்கு ஐந்துவயதுள்ளவர்களாகத் தோன்றினூலும், ஞானத்தால் முதிர்ந்தவர்களாய்ஞானோபதேசத்தால் உலகத்தோரை ஸம்ஸாரக்கடலிலிருந்து கரையேற்றிக்கொண்டு ஆத்மாராமர்களாய் விளங்கி வருகிறூர்கள். சீக்கிரத்தில் தாங்களாகவே உம்மையடைந்து ஸதுபதேசம் செய்யப்போகிறூர்கள். பரமோத்தமனுன சிஷ்யனைத்தேடி உபதேசிப்பதே அம்மஹான்களின் ஸ்வபாவம் என்று உரைத்ததைக்கேட்டு ஆவலுள்ளவனுய் அவர்களின் வரவை கனவிலும் எதிர்பார்த்தவண்ணமாயிருந்தார்.

## ஸனகாதிகளின் வரவு.

இவ்விதம் இருக்கும்போது அவரது பாக்யத்தின் பரிபாகத்தால் அவரருகில் சூரியபகவானுக்குச் சமமான தேஜஸ்ஸுள்ள அம்மஹாயோகிகள் ஆகாயமண்டலத்திலிருந்து இறங்கினூர்கள். "வீட்டிற்குப் பெரியோர் வருங்காலையில் இல்லறத்திலுள்ள புருஷர்களின் ஆவிகள் உயரக்கிளம்புகின்றன. எழுந்துவணங்கினவுடன் மறுபடியும் அவர்களை அடைகின்றன" என்று மனுநீதிப்படி கிளம்பின ஆவிகளை இழுக்க விரும்புகிறவர்போல் பரபரப்புடன் எழுந்து வணங்கினுன். நல்லொழுக்கம்பெற்ற அவ்வரசன் நல்வரவு விசாரித்து அர்க்யம் கொடுத்து தர்ப்பாசனத்தில் அமரச்செய்து, விதிப்படி பூஜித்தான்.

## தன்னதிர்ஷ்டத்தைக் கூறல்.

'மங்களத்திற்கு நிதியான மஹான்களே' யோகிகளுக்கும் அரிதான தங்களது கருணை என்னிடம் ஏற்படுவதற்குத் தகுந்த புண்யகர்மாக்களை ஜன்மாந்தரங்களில் நான் செய்திருக்க வேண்டுமென்று ஊஹிக்கிறேன். ஞானிகளின் அனுக்கிரஹத்திற்கு நான் பாத்திரமாகிறதால், எனக்கு இவ்வுலகிலோ மேலுலகிலோ அரிதானபொருள் ஒன்றுமில்லை. இபோது மும்மூர்த்திகளும் எனக்

குப் பிரஸன்னமானூர்கள். எனக்கு நல்லபொழுது விடிந்தது. என்
மூன்னோர்கள் திருப்தியடைகின்றனர். மன்வாதி மஹாபுருஷர்க
ளுக்கும் எட்டாத தங்கள் தர்சனத்தை அடைந்தேன். எவர்களி
ன் வீட்டின் அங்கணமானது பெரியோர் உட்கார்ந்து ஸல்லாபம்
செய்யும்படியான பாக்கியம் பெற்றதோ அவர்களே அதிர்ஷ்ட
சாலிகள் 'புல்லாஸனமோ மண்தரையோ, தீர்த்தமோ, ஸத்யமா
ன வாக்கோ ஆகிய இந்நான்கும் நல்லோரின் இல்லத்தில் ஒருக்
காலும் கிடைக்காமல்போகிறதில்லை." என்று மனு கூறுகிருர்.
பாகவதர்களின் கால்களைக் கழுவின ஜலத்தால் நனைக்கப்படாத
வீடுகள் துஷ்டமிருகங்கள் தங்கும் மரங்களுக்குச் சமானங்களா
கின்றன.

## குசல ப்ரச்னம்.

'பிரும்மவித்துக்களே' தங்களுக்கு நல்வரவா ? தாங்கள் வய
தால் பாலர்களாயினும் ஞானத்தால் முதிர்ந்தவர்களாகிறீர்கள்.
கன்மாவுக்குத்தக்கபடி பிறவியை யடையும் என்போன்றவருக்கு
விபசனம் நேரிடக்கூடுமானதால் க்ஷேமமா என்ற ப்ரச்னம் செய்
ய சந்தர்ப்பமுண்டு. ஆத்மாராமர்களான தங்கள் விஷயத்தில் குச
லப்ரச்னம் யுக்தமாகாது. ஆகையால் என்னை அதிர்ஷ்டசாலியாக்க
ஒரு வேண்டுகோள், பக்தர்களின் அனுக்கிரஹத்திற்காகவே
கங்கணங்கட்டிக்கொண்டு சஞ்சரிப்பவர்களும் ஸகலரின் ஹிரு
தய குகையில் வசிக்கும் நாராயணஸ்வரூபிகளுமான தாங்கள் எல்லை
இல்லாத இந்த ஸம்ஸாரக்கடலிலிருந்து என்னைக்கரையேற்றி
முக்தியை அனுக்ரஹிக்கவேண்டும்.

## ஸனத்குமார வசனம்.

இவ்வாறு கருத்து நிறைந்து செவிகளுக்கு இன்பந்தரும்
அத்தேன்மொழியைக் கேட்டு மகிழ்ந்த அந்த ஞானிகளில்
ஒருவரான ஸனத் குமாரர் மந்தஹாஸத்தோடு சொல்லத்தொடங்
கினர். 'அரசனே' உலகத்தின் நன்மையிலேயே கண்ணுங்கருத்
துமுள்ள உனது ஸங்கம் எங்களுக்குச்சந்தோஷத்தைத் தருகிறது
ஸாதுக்களின் ஸங்கம் ஒருவருக்கொருவர் இன்பம் அளிக்கக்கூடி
யதே. அரசனே ஸாதுக்களுடைய சம்பாஷணத்தால் மனதின்
மலம் ஒழிந்து தெளிந்து வைராக்யமும் ஆன்மவிசாரத்தில் அவா
வும் ஏற்படுகிறது. அதுவும் உத்தமனான புருஷனுக்கு சீக்கிரத்தி

லேயே ஏற்படுகிறது. மற்றவருக்கோ சித்தத்தின் சுத்திக்குத் தக்கபடி கிரமமாய் சிரத்தை முதலான குணங்களால் பெருகிற பக்தியால் லபிக்கிறது. சுருக்கமாய் யாவருக்கும் தகுதியான உபாயத்தை யோசிக்குமிடத்துஸத்குருவின் பிரஸாதமே தக்க தாகிறது.

## ஜன்மாவின் பயன்.

ஜீவர்கள் யாவரும் புண்ணிய மிச்ரமான பாபகர்மத்தால் தேவ மனித திர்யக் முதலிய சரீரங்களைப்பெற்று, பகிரங்க விஷய மான வெளிநோக்கமுள்ளவர்களாய் ஆன்மஞானத்தை அறியா தவர்களாகிறார்கள். இவ்விதம் இருந்துகொண்டு "உண்டதே உறுதி கண்டதேகாக்ஷி" என்று நினைத்து துக்கிகளாய் காமத் தால் லப்யமான போகமருந்தி காமிகளாய் விளங்குகிறார்கள். ஆற்றின் சுழலில் விழுந்து பரிதபிக்கும் கீடம் சுகமற்றதாயிருக் குங்காலை ஜன்மாந்தர புண்ய பரிபாகத்தால் ஒரு தயாளுவான புருஷன் தோன்றி அக்கீடத்தை யெடுத்து அந்தநதிக்கரையில் உள்ள மரத்தினடியில்விட, பிறகு அது ஜீவிக்கலாகும். அது போல் ஜீவர்களான யாம் பிறவிக்கடலிலமிழ்ந்து சரீரங்களாகிற சுழல்களில் விழ்ந்து துக்கிகளாய் வருந்துங்காலை ஸத்கர்ம புஞ் சத்தால் பிர்ம்ம நிஷ்டனை ஸத்குருவையடைந்து பஞ்சகோச விசாரம் முதலியதால் அவரால் கரையேற்றப்பட்டு பேரானந்தம் அடையவழிபடவேண்டியதுதான் ஜன்மமெடுத்ததற்குப்பலனும்.

## மனதின் சுத்தி.

வெகு ஜன்மாக்களில் செய்யப்பட்ட புண்யங்களின் பரிபா கத்தினுல் மானிட ஜன்மம் பெற்று அதிலும் மேலான பிராம்மண் யம் வாய்ந்த யாம் யாவரும் புருஷார்த்தங்களைப் பெற ஸாதன மான ஸத்ஸங்கத்தில் பழகி, நல்லொழுக்கங்களை விருத்திபண் ணிக்கொண்டு, ஞானஸாதனங்களைக் கைப்பற்றி, மனதைக் களங் கமறச் செய்தல்வேண்டும். மனது அழுக்கற்றுத்தெளிவாயிருந் தால்தான், குருவின் உபதேசத்தை நிலைக்கச்செய்து யுக்திகளால் உறுதிப்பட்டு நிதித்தியாஸத்துக்கு ஏற்றதாகும். மனது தெளிவு பெருமல் எத்தனை விசாரங்கள் செய்தாலும் முக்தி கிட்டாது. பந்தமும் முக்தியும் மனதாலேயே ஏற்படக்கூடியது. அவ்விதமே இஷ்டாநிஷ்டங்களும் அதனுலேயே உண்டாகின்றன. மனது

நிர்மலமாயிருந்தால் மோக்ஷத்திற்கு ஹேதுவாகிறது. களங்க முள்ளதாயின் பந்தத்துக்கே காரணமாகிறது. நிர்மலமான மன தால் அழிவற்றதும் அழிவுற்றதுமான வஸ்துவைப் பகுத்தறியுங் கால் முக்கியமான பயன் ஏற்பட வழி உண்டாகிறது. அப்படிப் பகுத்தறியாவிடில் அநர்த்தமே ஸம்பவிக்கின்றது. ஆகையால் அவ்விதமான சித்தத்தைத் தெளிவுறச் செய்யவேண்டும்.

## அதற்குச் சாதனங்கள்.

நற்சீலமுள்ளவர்களின் அன்னத்தைப் புசிப்பது ஸாத்விக புராணங்களைக்கேட்பது, ஸாதுக்களையநுசரிப்பது, தங்கள் தங்கள் வர்ணாசிரமங்களைத் தழுவி நடப்பது, ஈசுவரனையாராதிப்பது, இவை முதலியவைகள் மனச்சுத்திக்குக் காரணங்கள்.

## ஸத்குருமகிமை.

ஆன்மஞானத்தை விரும்புகிறவன் ஸத்குருவை நாடவேண் டும். ஸத்குருவை நாடுகிறவனே ஞானியாவான். ஆசாரியனிட மிருந்து பெற்ற வித்தை தான் அவித்தையையொழித்து ஆன்ம ஸாக்ஷாத்காரத்தை உண்டுபண்ணுவதில் பிரதான ஸாதனமாகும். மற்றவை அவ்விதம் ஆகா என்று உபநிடதங்கள் அறிவிக்கின் றன. நான்கு ஸமுத்திரங்களால் சூழப்பட்டதும் ஸர்வதனங்க ளால் நிறைந்ததுமான வஸுமதியைத் தானம் பண்ணினாலும் அதைக்காட்டிலும் வித்யாதானமே மேம்பட்டதாகும். ஜீவாத்மா பரமாத்மா இவைகளின் ஐக்கியத்தை வெளியிடுகிற வேதங்க ளால் ஆத்மா அடிக்கடி பிரகாசிக்கும்படி செய்யப்படினும் குரு வனுக்கிரகம் கிட்டாதவர்களுக்கு ப்ரத்யக்ஷம் செய்துகொள்ளல் முடியாது. திருவருள்நிறைந்த ஸத்குருவின் கடாக்ஷங்கள் கா ருண்யஸாரங்களாகிற ஜலங்களால் நிறைந்து இஷ்டப்பட்டவை களை அளிப்பதில் கற்பக விருக்ஷங்களுக்கொப்பாகி குளிர்ந்து கொண்டு மனதின் தாபங்களை அடக்குகின்றன. ஜன்மம் கிழத் தனம் மரணம் முதலியவற்றால் பயங்கரமாயும், பெரிய கனவாயும் விளங்குகிற மாயையால் தோன்றும் இந்த ஜகத்தில் நிமிஷந்தோ றும் அதிகமான தாபங்களால் தபித்துக்கொண்டு அகங்காரமாகிற புலியால் பீடிக்கப்பட்டும் யாம் வருந்துகிறோம். அப்படி வருந்து பவரை ஸத்குருவானவர் மிகுந்ததயையால் அப்பெருந்தூக்கத்தி லிருந்து விழிக்கச்செய்கிறார். மாலுமி கப்பலைக்கொண்டு கடலி

370

லிருந்து பிரயாணிகளை அக்கரை சேர்ப்பதுபோல், ஆசாரியனு கிற நாவிகன் ஞானமாகிற கப்பலைக்கொண்டு ஸத்சிஷ்யனுகிற பிர யாணியை ஸம்ஸாரக் கடலிலிருந்து தாரணம் செய்கிறார்.

## ஸத்சிஷ்யன்.

ஸத்சிஷ்யனுனவன் அநித்தியமான வஸ்துக்களில் பற்றற்று சமம் முதலிய குணங்கள்வாய்ந்திருப்பான். குரு எழுந்திருப்ப தற்கு முன்னுல் அதிகாலையிலேயே தான் எழுந்து, சரீரசுத்தி செய்து, நீராடி, குருவுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளைச் செய்ய சன்னத்தனுயிருப்பான். குருக்கள் நிற்கும்போது நின்று கொண்டும் மொழியும்போது, அடக்கத்துடன் செவியுற்றுக்கொ ண்டும் செல்கையில் சென்றுகொண்டும் அவர்களுக்குத் தீமை யைக் கனவிலும் நினையாமலும் இயம்பாமலே நன்மையை நாடிக் கொண்டும் இருப்பான். அவாது கட்டளையை ஒழுங்கு நடத்தி வருவான்.

## ஸத்யகாமனது சரிதம்.

ஜபாலையின் மைந்தனுன ஸத்யகாமன் கௌதமரை சாணம டைந்து சிஷ்யனுகத் தன்னை அங்கீகரிக்கவேண்டுமென்று கேட் டுக்கொண்டான். அப்போது அவர் உனது கோத்திரம் முதலா னவை என்ன என்று வினவினுர்? அப்போது ஸத்யகாமன் என் பிதாவின் பெயரை அறியேன். என் தாயார் ஜபாலை எனப்படு வாள். கோத்திரம் என்னவென்று குரு கேட்பாராயின் என்ன பதிலுரைப்பேன் என்று கேட்டபோது என் தாய் சொன்னதா வது— பால்யத்திலேயே உன்னைப்பெற்றேன். நான் பெரியோர் களுக்குப் பணிவிடை முதலானதைச் செய்யவே காலம் போதா மலிருக்கும். அத்தருணத்தில் கணவனுேடு பேசவே சமயம் வாய்க்காது. பிறகு கணவனும் பாலோகமடைந்தார். ஆகையால் எனக்கு கோத்திரம் முதலானது தெரியாது. ஜபாலையின் குமா ரன், ஸத்யகாமன் என்ற பெயருள்ளவன் என்று சொல் என்று உரைத்தாள் என்றுன். அவ்விதமான உண்மையை பிராம்மண னல்லாதவன் உரைக்கமாட்டான். இவன் உபதேசிக்கத்தக்க பிராம்மணன்தான் என்று தீர்மானித்துக்கொண்டு அந்தேவாஸி யாக ஒப்புக்கொண்டார். அவ்விதம் ஒப்புக்கொண்டு மிகவும் மெலிந்த நானூறு கோக்களை அவனிடம் கொடுத்து ஆயிரம்கோக்

களாய் விருத்தியாகும் வரை திரும்பிவரவேண்டாம் என்று அனுப்பினர். அவ்விதமே வனத்தில் வெகு வருடங்களாய் பசுக்களை ஸம்ரக்ஷித்துவரும்போது அவை ஆயிரமாயின. அப்போது வாயு தேவதை களித்து, விருஷபத்தில் பிரவேசித்து நான்கு கலைகளுள்ள ஒரு பாதத்தையுபதேசித்தார். அவ்விதமே தேயு, சூரியன் பிராணன் ஆகிய தேவர்களும் ஒவ்வொரு பாதத்தையே முறையாய் உபதேசித்தார்கள். இவ்விதம் உபதேசிக்கப்பெற்று விடைபெற்று குருகுலம் சென்றான். அப்போது கௌதமர் சிஷ்யனே பிரும்மக்ஞானியாய் விளங்குகிறாய். எவர் உபதேசித்தனர் எனவே. ஸத்யகாமன் மனிதரைக் காட்டிலும் புறம்பான தேவர்கள் உபதேசித்தனர். அவர்களின் உபதேசத்தை யான் பொருட்டாக பாவிக்கவில்லை. தாங்களே உபதேசித்தருளவேண்டும். குருவினிடமிருந்து பெற்ற வித்தைதான் பயன்படும் என்று ஆன்றோரிடத்திலிருந்து கேள்விப்பட்டுள்ளேன் என்று வேண்டினான். அப்போது கௌதமர் அதையே உபதேசித்தார். பதினாறு கலையுள்ள அவவித்தையைக் கொஞ்சமேனும் வழுவாமல் அதேமாதிரியாகவே இருந்தது. ஆயினும் ஸத்குருவின் முகமாகவே அதைத் தெரிந்துகொள்ளவேண்டும். அதுதான் ஸித்திக்கும். ஆனாலும் உன்போன்றவருக்கு இருக்கும் பகதியைக்கண்டு நாங்களே தேடி அனுக்ரஹிக்கிறோம் என்றார்கள்.

## பிரம்ம நிஷ்டரின் சிறப்பு.

இவ்வாறு அனுக்ரஹித்து ஸனத்குமாரரால் தத்வோபதேசம் பெற்று ஆதிராஜன் பரமானந்தமடைந்து அம்மஹான்களைப் பணிந்து துதிக்கலானான். பகவான் எனக்கு அருளியபடி தங்கள் தரிசனம்பெற்று உபதேசமடைந்தேன். ஸம்ஸாரக்கடலிலிருந்து கரையேற்றப்பட்டேன். தன்யனானேன். ஆத்மோபதேசத்தால் அருள்புரிந்த தங்களுக்கு நான் கொடுக்கக்கூடிய குருதக்ஷிணை என்ன இருக்கிறது. ஸகல ராஜ்யங்களுடன் ஆன்மாவையே தங்களிடம் ஒப்புவிக்கிறேன். பிரும்மக்ஞானி எல்லாவற்றிற்கும் பாத்யதை உள்ளவர். பிரபஞ்சத்தில் காணப்படும் எப்பொருளும் பிரம்மக்ஞானிகளான பிராம்மணருக்கே சொந்தமாகும். பிரும்மக்ஞானி தன்னுடையதையே புசிக்கிறான். தன்னுடையதையே கொடுக்கிறான். அவர்கள் கிருபையைமுன்னிட்டே க்ஷத்திரியர் முதலிய யாவரும் சுகம்பெறுகிறார்கள். தீனதயாளுக்களான தங்களுக்கு அஞ்சலிபந்தம் செய்கிறேன் என்று ஆனந்த பாஷ்பம் சொரிந்து மெய்மறந்து நின்றான்.

## ராஜ்யத்தை ஒப்பித்தல்.

பிறகு அம்மஹான்களும், வைன்யனின்நல்லொழுக்கத்தைப் புகழ்ந்து, சபையோர் முன்னிலையிலேயே மறைந்தார்கள் ஆதிராஜனும் அவர்களின் உபதேசப்படி. பகவத்பக்திசெய்து, ஆன்மாவிலேயே மனதைச்செலுத்தி ஆன்மாராமனாய் விளங்கினர். இவ்விதம் சித்தத்தின்பரிபக்வம்பெற்று, பூபாரத்தை புத்திரர்களிடம் ஒப்புவித்து, பதிவிரதாமணியான அர்ச்சிஸ் என்ற பட்டமஹிஷியுடன் தவஞ்செய்ய வனஞ்சென்றான்.

## வானப்ரஸ்தாசிரமம்.

அவ்விடத்தில் மூன்றாவது ஆசிரமமான வானப்ரஸ்தத்தின் ஒருவகுப்பான வைகாநஸமதத்தையடைந்து, நியமங்கள் குன்றாமல் கொடூரமான தவஞ்செய்துகொண்டு கந்தமூல பலங்களைப் புசித்து மஹாயோகியாய் விளங்கினான், சிறிது காலம் மரங்களின் பழுப்புச்சாருகளைப் புசித்தும், சிறிதுகாலம் ஆகாரமின்றியும் கோடையில் பஞ்சாக்னிமத்தியிலும், மழைகாலத்தில், மழை தாரைகளைச்சித்து நீரிலும், குளிர்காலத்தில் கழுத்தளவு தண்ணீரில் நின்றுகொண்டும் தவஞ்செய்தான். மேலும் தரையிலேயே சயனித்து மௌனியாயிருந்து புலன்களையடக்கி புருஷோத்தமனை பஜித்து, நிர்மலமான சித்தம்பெற்று ஞானவைராக்கியம்பெருகி, தேஹாத்மபுத்தியைத்தள்ளி ஆன்மஸ்வரூபத்தை யறியலானான். பிறகு யோகாப்யாஸத்தால் சரீரத்தை தஹித்து பகவத் ஸ்வரூபத்துடன் கலந்தார்.

## அர்ச்சிஸ்ஸுவின் அநுமரணம்.

மஹாராணியான அர்ச்சிஸ்ஸும் புருஷனைப் பின்தொடர்ந்து தவஞ்செய்து சித்தசுத்திபெற்று, ஆன்மஸ்வரூபத்தை யறிந்தபடியால் தன கணவன் சரீரம் பிரக்ஞையற்று ஆவி துறந்திருப்பதை யறிந்து. சிறிதுநேரம் புலம்பி, மலையின்குகையில் சிதையை ஏற்படுத்தி அதை தஹனஞ்செய்தாள். பிறகு, அச்சமயத்திற்கேற்ற கிருத்யத்தைச்செய்து நதியில் ஸ்நானஞ்செய்து, கணவனுக்கு உத்தரக்ரியைசெய்து, ஆகாயவாஸிகளான தேவதைகளை நமஸ்கரித்து, காந்தனுடைய பாதங்களை தியானித்து மூன்று தடவை அக்னியை வலஞ்சுற்றி வந்து அதில் பிரவேசித்தாள். இவ்விதம் புருஷனோடு அநுமரணஞ்செய்த அர்ச்சிஸ்ஸைக்கண்ட ஆயிரக்கணக்கான தேவஸ்திரீகள் கண்டு புஷ்பவருஷம் செய்தார்கள். மற்றவர்கள் லக்ஷ்மிபோன்ற இவளைப் புகழ்ந்தார்கள். மற்றவர்கள் இந்த அர்ச்சிஸ் பிருதுமஹாராஜனோடு கலந்துவிட்டாள். இவள் பெருமையே பெருமை. இவ்விதமேயாவரும் உலகவாசனையையொழித்து ஞானம்பெற்றவர்களாகவேண்டும்என்றுசொல்லினர்.

K. V. சுப்பிரமண்ய சாஸ்திரிகள்.